# <u>சாதாரணக்கூட்டம்</u>

**விகாரி வருடம் ஐப்பசி மாதம் 11 ஆம் தேதி 2019ம் வருடம் அக்டோபர் மாதம் 28ம் தேதி (28.10.2019) திங்கள் கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற அம்பாசமுத்திரம் நகர் மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**தலைமை: திரு.ஜெ.பிரேம்ஆனந்த்,B.Sc.,**
தனி அலுவலர்/ஆணையாளர்
அம்பாசமுத்திரம் நகராட்சி

**பொருள் எண்.1**

அம்பாசமுத்திரம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2018–19ன் கீழ் ரூ.700.00 லட்சம் மதிப்பீட்டில் 4 சிப்பங்கள் சாலை பணிகள் மேற்கொள்ள சென்னை நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்:12981/2018/இ3 நாள் 24.07.2018 ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு, முறையே ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு பணிகள் நடைபெறும் பொழுது சிப்பம் 1ல் வார்டு எண் 05 கீழ திருமஞ்சன ரோட்டில் தார்சாலை அமைக்க அப்பகுதி மக்கள் பணிகள் செய்திட எதிர்ப்பு தெரிவித்ததால் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. TURIP 2018–19 சிப்பம் –1ல் வார்டு எண் 05 கீழ திருமஞ்சன சாலைக்கு பதிலாக கீழ்கண்ட விபரப்படி உள்ள பணிகளை தேர்வு செய்யவும் அப்பணிக்கு தயார் செய்யப்பட்ட திருத்திய மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | திருத்திய மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | அம்பாசமுத்திரம் நகராட்சி வார்டு எண் 07 அடப்பு தெரு, வார்டு எண் 8 செங்குந்தர் தெற்கு தெரு, வார்டு எண் 21 எழில் நகர் மேல்பகுதி, தமிழ் நகர், வார்டு எண் 20 அம்மையப்பர் கோவில் தெரு, வார்டு எண் 2 வீரவநல்லூர் ரோடு பகுதிகளில் தார்சாலை அமைத்தல் (சிப்பம் 1) | ரூ. 200.00 |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று TURIP 2018–19 சிப்பம் –1ல் உள்ள பணிகளை மாற்றி அட்டவணையில் உள்ள தெருக்களில் சாலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 503 / அனுமதிக்கப்பட்டுது**

**(ஒப்பம்) <u>J.பிரேம்ஆனந்த்,</u>**
**தனிஅலுவலர்/ஆணையாளர்**
அம்பாசமுத்திரம் நகராட்சி

//உண்மை நகல்//

**ஆணையாளர்(பொ)**
அம்பாசமுத்திரம் நகராட்சி